## இருக்கும்



இந்த அறிக்கை தயாராகி விட்டதாகவும், அதற்குப் பின்னர், எந்தநேரத்திலும் இது ஜனாதிபதியிடம் கையளிக்கப்படலாம் என்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பேச்சாளர் கூறியிருந்தார்.

இந்த அறிக்கையை ஜனாதிபதியிடம் கையளிப்பதற்கு நேரம் ஒதுக்கித் தருமாறு ஜனாதிபதி செயலகத்திடம் கேட்டுள்ளதாகவும், அவர்களின் பதிலுக்காக காத்திருப்பதாகவும் அவர் தகவல் வெளியிட்டிருந்தார்.

இந்தநிலையில், அறிக்கை எந்தநேரத்திலும் ஜனாதிபதியிடம் கையளிக்கப்படலாம்- சிலவேளைகளில் இந்தப் பத்தியை வாசிக்கும் போது அது கையளிக்கப்பட்டும் இருக்கலாம்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை குறித்து சர்வதேச அளவில் எதிர்பார்ப்பு அதிகமாகியுள்ள சூழலில், இந்த அறிக்கை மீதான அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து வலியுறுத்தினால் சிலவேளைகளில் இதுவும் கூட நடைமுறைப்படுத்தப்படாது போகும் நிலை உருவாகி விடும்.

எனவே தான், அரசங்கத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை, சரியோ தவறோ- எல்லா விடயங்களையும் அது சீர்தூக்கி ஆராய்ந்ததோ இல்லையோ, அதுபற்றிக் கவலைப்படாமல் முதலில் அறிக்கையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று அழுத்தம் கொடுக்கப்படுகிறது.

இது ஒரு வகையில் அரசாங்கத்துக்குச் சிக்கலான விடயம் தான்.

ஏனென்றால் ஐ.நா நிபுணர் குழு அறிக்கையைப் போன்று இதையும் எடுத்த எடுப்பிலேயே நிராகரிக்க முடியாது.

ஏனென்றால் இதற்கு அதிகாரமளித்தது ஜனாதிபதி. இதன் பரிந்துரைகளை ஏற்று ராஜபக்ஷ கூறியுள்ளார்.

படையினர் எவரையும் சர்வதேச நீதிமன்ற விசாரணைக்குக் கொண்டு செல்ல அனுமதிக் கப் போவதில்லை என்று போர் வெற்றி விழாவில் உரையாற்றும் போது அவர் கூறியிருந்தார்.

சர்வதேச நீதிமன்றத்துக்கு மட்டுமன்றி உள்நாட்டு நீதிமன்றத்துக்கு கொண்டு செல்லப்படுவதையும் அவர் தடுப்பாரா என்பது தெரியவில்லை.

ஆனால், நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் படையினர் மீது நம்பகமான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டால், நீதி விசாரணை நடத்தப்பீடும் என்று பாதுகாப்புச் செயலர் முன்னொரு முறை கூறியிருந்தார்.

இன்னொரு பக்கத்தில் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவும் போரில் விதிமீறல்கள் ஏதும் நடக்கவில்லை- விதிமீறல்கள் இடம்பெற்றிருந்தால் கூட விசாரணையும், அதற்குப் பொறுப்பானவர்களை தண்டிக்க எடுக்கப்படும் நடவடிக்கைகளும் அரசுக்குத் தலையிடி கொடுக்கும் விடயங்களாக அமைவதற்கு வாய்ப்புகள் உள்ளன.

ஆனால், ஆணைக்குழுவின் அறிக்கையில் சுமத்தப்படக் கூடிய குற்றச்சாட்டுகள் தொடர் பான பரிந்துரைகளை நடைமுறைப்படுத் தாமல் அரசாங்கத்தினால் ஒதுக்கி விட முடியாது.

சர்வதேச விசாரணை அழுத்தங்கள் எழுந்த போதெல்லாம், இந்த ஆணைக்குழுவை சுட்டிக்காட்டித் தான் அரசாங்கம் தப்பி வந்தது.

எனவே ஆணைக்குழு அறிக்கை தவறானது என்றோ நீதியற்றது என்றோ கூறி ஒதுக்கி விடவோ பரிந்துரைகளை நடைமுறைபடுத்தாமல் நழுவி விடவோ முடியாது.

அவ்வாறு நழுவிக் கொள்வது அரசுக்கு மேலும் நெருக்கடி கொடுப்பதாகவே அமையும்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் குற்றங்களை சார்ந்து படையினர் எவரையாவது தண்டிக்க வேண்டிய நிலை உருவானால், அதனை சிங்களத் தேசியவாத சக்திகள் அனுமதிப்பார்களா என்பது சந்தேகம் தான்.

அத்துடன் படையினரின் செயல்களுக்குப் பாதுகாப்பளித்து உத்தரவாதம் கொடுத்த அரசாங்கமே அவர்களைத் தண்டிக்குமா என்ற கேள்வியும் உள்ளது.

எனவே, இந்த அறிக்கை சாதகமாக இருந்தாலும் சரி, பாதகமாக இருந்தாலும் சரி அரசுக்குத் தலைவலி தான்.

கிட்டத்தட்ட இது ஒரு இருமுனைகளைக் கொண்ட வாளைப் போன்றது- எங்கே பிடித்தாலும் பதம் பார்த்து விடும்.

அறிக்கை தரமற்றதாக இருந்தாலும் பிரச்சினை, தரமானதாக அமைந்தாலும் பிரச்சினை.

இந்தப் பிரச்சினையில் இருந்து விடுபடுவது மிகவும் சிக்கலானது.

எப்படித் தான் அரசு இதிலிருந்து தப்பிக் கொள்ளப் போகிறது என்பது அடுத்து எழப் போகின்ற கேள்வியாக இருக்கும்.